நின்று விடும். இதைக் கண்காணிப்பதற்கு சினிமாட்டோகிராப் ஆக்ட் பிரகாரம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர எண்டெர்டெயின் மெண்ட்ஸ் ஆக்டில் அதிகாரம் ஒன்றுமில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : விவசாய வருமான வரி பாக்கி அதிகமாக இருக்கிறது என்ற தலைப்பிலே அமைச்சரவர்கள் யாராவது விவசாய வருமான வரி கட்டாதிருக்கிறார்களா ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போடலாம். அங்கத்தினர்களும் கட்டவில்லையா என்று போடலாம் சேர்த்து.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் முன்பு வெகு காலத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டபோது தொகை குறைவாக இருந்த தால் தாசில்தார்களும், கிராம அதிகாரிகளும் வசூல் செய்ய வேண்டு மென்று சட்டம் இருக்கிறது. இப்போது சேல்ஸ் டாக்ஸில் 2 கோடி பாக்கி யிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆகவே அந்தந்த டிபார்ட்மெண்டில் உள்ள அதிகாரிகளுக்கு என் இந்த அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்து அவர்களே நேரடியாக வசூல் செய்ய ஏற்பாடு செய்யக் கூடாதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மொத்தத்தில் இரண்டு கோடி இருந்தாலும் ப்ரேக் அப் செய்து பார்த்தால் பிரமாதமாயிருக்காது. 54 லட்சம் ரூபாய்க்கு ரெவின்யூ ரிக்கவரி ஆக்டின் கீழ் நடவடிக்கைகள் எடுத்து இப்போது நடந்து கொண்டிருக்கிறது. 17 லட்சம் ரூபாய் அளவிற்கு மாஜிஸ் ட்ரேட் கோர்ட்டில் நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இன்னும் மற்றவர்களிடத்திலிருந்து நாம் வசூலிப்பதற்காக எடுத்துக் கொண்ட "கார்னிஷிங் ப்ரொஸீடிங்ஸ்"ல் 86,000 ரூபாய் இருக்கிறது. அப்பீல் ரிவிஷன் போட்ட முறையில் ஸ்டே கொடுத்த அளவில் 51 லட்சம் இருக் கிறது. வசூல் செய்ய முடியாது என்ற நிலையில் 8,79,000 ரூபாய் இருக் கிறது. இதையெல்லாம் மொத்தத்தில் கூட்டும்போது 2 கோடி சில்லரை இருந்தாலும் அது அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

அரிசனங்களுக்கு அரசாங்க உத்தியோகம்

*318 கேள்வி—**திரு எஸ். மணி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் உத்தியோகத்திற்கு அரிசனங்களுக்காக 12½ சத விகிதம் ஒதுக்கியிருப்பது உண்மையா ?

(இ) சர்க்கார் உத்தியோகங்களுக்குக் கொடுக்கும் பதவி உயர் விலும் இந்த 12½ சத விகிதம் கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 16 per cent of the appointments in most of the services under this Government are reserved for Scheduled Castes and Scheduled Tribes.

(*b*) The reservation does not generally apply to promotions.

*319 கேள்வி—**திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட விகிதாசாரப்படி உத்தியோகங் கள் வழங்கப்படுகின்றனவா ?

(இ) இல்லையெனில், இனியாகிலும் அப்படிக் கொடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Does not arise